1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பொது மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று எண்ணித்தான் மாவட்டந்தோறும் அவைகளை நீடிக்க வேண்டும். ஆனால், வணிகர்களுக்குச் செய்கிறபோது, வணிகர்கள் இன்றைக்கு 3,000 பேர்கள்தான் வந்திருக்கிறார்கள். ஒரு இடத்தில் இருந்தால்தான் அதைப் பற்றி யோசித்து, அதுவும் முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இருக்கிறபோது, அது வணிகர்களுடைய நலனை நிச்சயமாகப் பாதுகாக்கும், இது மாவட்டந்தோறும் தேவையில்லை என்பதை உறுதியாகவே தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 457, திரு. ப. கலிய பெருமாள், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

457—

திருவையாறு ஒன்றியத்தில் பிற்பட்டோருக்கான மாணவர் விடுதி

*5259 திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருவையாறு ஒன்றியத்தில் பிற்பட்டோருக்கான மாணவர் விடுதி ஒன்று கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை. ஏனெனில், பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி இல்லாததால், கட்டடம் கட்டுகிற பிரச்சினை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடுதியே இல்லாமல் கட்டடம் கேட்டீர்கள் என்றால் எப்படி? விடுதி கேளுங்கள்.

திரு. ப, கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். திருவையாறு ஒன்றியத்தில் திருவையாறு பேரூராட்சியிலும், திருப்பரங்குறிச்சி பேரூராட்சியிலும் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதோடு, அரசர் குறவர் கல்லூரியும் அங்கே இருக்கின்றது. வெளி மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள் அந்த அரசர் கல்லூரியிலே வந்து சேர்ந்து படிக்கிறார்கள். இந்த உயர்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள் கிராமப் பகுதியிலே இருந்து, தொலை தூரத்திலிருந்து 6 மைல் 8 மைல் தூரம் வந்து படிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள், அந்த கிராமப் பகுதியிலே பேருந்துகள் ஒரு தடவை, இரண்டு தடவைதான் போகிறது. பேருந்தை நம்பி அல்லது சைக்கிள்

களை நம்பி அவர்கள் இருக்கின்றார்கள், அதுவும் பேருந்தை விட்டுவிட்டால், அவர்கள் சைக்கிளிலே வந்து போக வேண்டிய நிலை இருக்கிறது. பேருந்தை விட்டுவிட்டால் அவர்கள் வருவது சிரமம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஹாஸ்டல் கேட்கப் போகிறீர்களா ? பேருந்து கேட்கப் போகிறீர்களா? ஹாஸ்டல் ஆரம்பிக்கப்படுமா என்று கேளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவையாறு ஊராட்சிக்குட்பட்டு மாணவர் விடுதி அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோன்று, திருவையாறு ஒன்றியத்திலே இப்போது மாணவர்கள் விடுதி இல்லை என்று தெரிகிறது. இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு புதிய விடுதி தொடங்க இயலுமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். அப்படி தொடங்குவதானாலும் அது மாணவியருக்குத்தான் விடுதி தொடங்குவதற்கு அரசு இப்போது முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 458, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

458—

பட்டணம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு புதிய கட்டிடம்.

*4218 திருமதி க. பழனியம்மாள் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராசிபுரம் தொகுதி பட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஹட்கோ நிதியுதவி மூலம் 1991–92 ஆம் ஆண்டில் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ள 64 பள்ளிகளுள், பட்டணம் அரசு உயர்நிலைப் பள்ளியும் அடங்கும்.